ஊரக மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் மாவட்டச் செயலாளர்கள், பெயர்பெற்ற தன்னார்வத் தொண்டு அமைப்புகள், குடியிருப்போர் சங்கங்கள் ஆகியோருடன் முதல் கூட்டத்தை நடத்த வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டாவது கூட்டத்தில் பெறும் கருத்துகளைப் பரிசீலனை செய்ய வேண்டும். தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் கருத்துகள் தனித் தனியாகக் கேட்கப்படும். மேலும், அரசியல் கட்சிகள் மற்றும் கோரிக்கைகள் அளித்துள்ளோர்களின் கருத்துகளும் கேட்கப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழுவிடம் தெரிவிக்கப்படும் கருத்துகளின் அடிப்படையில், பரிந்துரையுடன் கருத்துரு தயாரிக்கப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது நகராட்சி நிருவாக ஆணையருக்கு அனுப்பப்பட வேண்டும். தேவைப்பட்டால், பேரூராட்சிகளின் இயக்குநர் மாவட்ட அளவில் மூன்றாவது கூட்டத்தை நடத்தி, கருத்துருவின் மீதான விண்ணப்பம் மற்றும் ஆட்சேபணையைப் பெறலாம்; மூன்றாவது கூட்டத்தை நடத்தலாம். இப்படி எல்லாமுமே விதிமுறைகளுக்குட்பட்டு அங்கே அமைக்கப்பட்டால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை செய்யும். அதைப்போல, என்னுடைய துறை சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் இதுகுறித்து அறிவிப்பு இருக்கிறது. சில ஊராட்சிகள் பேரூராட்சிகளாகவும், பேரூராட்சிகள் நகராட்சிகளாகவும், அதாவது அந்த விதிமுறைக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளைத் தரமுயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 203, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

203—

காகிதத் தொழிற்சாலை

***25131—திரு. ப. ஆடலரசன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2018 ஜூன் 25]

(அ) திருத்துறைப்பூண்டி நகரப் பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி நகரப் பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் சுமார் ஒன்றரை இலட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. அதன்மூலமாக சுமார் 3,70,000 மெட்ரிக் டன் உலர்ந்த வைக்கோல் கிடைக்கிறது. இதனைக் கொண்டு ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்கினால், அங்கே இருக்கக்கூடிய தொழில்முனைவோருக்கும், தொழிலாளர்களுக்கும் வசதியாக இருக்கும். ஏனென்றால், பக்கத்தில் இருக்கக்கூடிய வேதாரண்யம் போன்ற பகுதிகளில் விளையக்கூடிய சவுக்கு மரங்களெல்லாம் தற்போது* TNPL–*க்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. அதன் மூலமாக நிறைய மூலப்பொருட்கள் கிடைக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையைத் தொடங்க வேண்டும். அங்கேயிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களெல்லாம் 3 மாத காலம் வேலையின்றி இருக்கும்போது, திருப்பூர், கோயம்புத்தூர் போன்ற பகுதிகளுக்குச் சென்று வேலை செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்கும்பொருட்டு, அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையை உருவாக்கினால், அந்தத் தொழிலாளர்களுக்கு அங்கேயே வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்படும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகிதத் தொழிற்சாலை இலாபகரமாக இயங்க வேண்டுமென்றால், நாளொன்றிற்கு 500 மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆண்டொன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யப்பட வேண்டும். ஆண்டொன்றுக்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் மெட்ரிக் டன் காகிதம் உற்பத்தி செய்யும் காகித ஆலை நிறுவப்பட வேண்டுமென்றால், 6 இலட்சம் டன் கரும்புச் சக்கை வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கோல் பற்றிக் கூறியுள்ளார். வைக்கோல் பற்றி மறு ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கிறது. வைக்கோலினுடைய அளவுகோல் எவ்வளவு என்று தெரியவில்லை. ஒட்டுமொத்த காவேரி டெல்டா பகுதிகளான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் வைக்கோலைப் பயன்படுத்தி காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்கூடக் கேட்டுக்கொண்டுள்ளார். தொழிற்சாலைக்கு, 6 இலட்சம் மெட்ரிக் டன் கரும்புச் சக்கை வேண்டும். கிட்டத்தட்ட 2 இலட்சம் டன் சவுக்கு, யூகலிப்டஸ் போன்ற மரங்களின் மரக்கூழ் வேண்டும். 30,000 கன மீட்டர் தண்ணீர் வேண்டும். உற்பத்திக்குச் செலவு செய்யப்படுகின்ற தண்ணீருடைய அளவு 30,000 கன மீட்டர் ஆகும்; 1,000 ஏக்கர் நிலம் வேண்டும்; மூலதனச் செலவு 2 ஆயிரம் கோடி வேண்டும். மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள திருத்துறைப்பூண்டி நகருக்கு அருகில் ஆலை அமைக்கப்பெற்றால், 30 ஆயிரம் கன மீட்டர் தண்ணீர் வேண்டும். அது டெல்டா பகுதி என்பதனால், விவசாயப் பெருங்குடி மக்களுக்குத்தான் தண்ணீரின் தேவை மிக முக்கியம். அதைக் கருத்திற்கொண்டு, கடைமடைப் பகுதியில் இருப்பதால், விவசாயத்திற்கு மட்டுமே போதுமான நீர் வழங்குகின்ற சூழ்நிலை உள்ளதால், தற்சமயம் அப்பகுதியில் காகிதத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.

2018 ஜூன் 25]

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கரூரில் இயங்கி வருகின்ற TNPL காகிதத் தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர் காவேரியிலிருந்துதான் எடுக்கப்படுகிறது. அதனுடைய கடைமடைப் பகுதியில்தான், டெல்டாவிற்கு வருகிற தண்ணீரிலிருந்து அது செயல்பட்டு வருகிறது. மேலும், அதற்குத் தேவையான கரும்புச் சக்கைகளெல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து தற்போது வாங்கப்பட்டு வருகிறது. அதேபோன்று, எங்கள் ஊரிலும் ஒரு தொழிற்சாலையை நிறுவி, வெளி மாநிலங்களிலிருந்து மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கான வசதிகளை செய்து தர வேண்டும். ஏனென்றால், பக்கத்தில் துறைமுகங்கள் இருக்கின்ற வசதிகள்கூட இருக்கின்றன. கரூரைவிட எங்களுடைய திருவாரூர் மாவட்டத்தில் நிறைய வசதிகள் இருக்கின்ற காரணத்தால், அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது முடியவில்லையென்றால், எவ்வாறு அரசு நேரடியாக நெல்லை கொள்முதல் செய்கின்றதோ, அதேபோன்று, உடனடியாக TNPL மூலமாக வைக்கோல்களை நேரடியாக விவசாயிகளிடமிருந்து அரசே கொள்முதல் செய்ய வேண்டும். மேலும், வேதாரண்யம் போன்ற பகுதிகளில் தைல மரங்கள், சவுக்கு மரங்கள் உட்பட நிறைய மரங்கள் அந்தப் பகுதிகளில் இருக்கின்றன. அதையும் நேரடியாக அரசே purchase செய்தால், அதனை இங்கிருந்து கொண்டு செல்வதற்கான செலவு மிச்சமாகும். அதுமட்டுமல்லாமல், அங்கேயே கூழ் தயாரிக்கக்கூடிய நிறுவனத்தை அமைத்து, அதனைக் கூழாக கரூருக்குக் கொண்டு சென்றால் மிகவும் வசதியாக இருக்கும் அல்லது pulp ஆக மாற்றும் technology–ஐ எங்களுடைய திருவாரூர் மாவட்டத்திற்குத் தந்தால், எங்களுடைய விவசாயத் தொழிலாளர்களுக்கும் உதவியாக இருக்கும். அதுமட்டுமல்ல; அங்கே கருவேல மரங்கள் நிறைய இருக்கின்றன. கோடைக் காலங்களில் அதையும் அந்த மக்கள் வெட்டி, அரசுக்கு விற்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால், நிலத்தடி நீரைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சூழ்நிலை வரும் என்பதை அரசுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1985 ஆம் ஆண்டு*

உருவாக்கப்பட்டு, அதன் உற்பத்தி, 90,000 டன், 4 இலட்சம் டன் எனப் படிப்படியாக உயர்ந்து, தற்போது 6 இலட்சம் டன்னாக உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது, கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டுதான் பேப்பர் தயாரிக்கப்படுகிறது. வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு பேப்பர் தயாரிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். R&D system–மூலம் அதற்கான research இன்னும் செய்யப்படவில்லை.

முற்பகல் 10–25

அதைச் செய்யும் காலக்கட்டத்தில், ஒட்டுமொத்த வைக்கோலினுடைய அளவுகோல் என்ன? எவ்வளவு quantity வருகிறது, எவ்வளவு மெட்ரிக் டன் வருகிறது? தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் எவ்வளவு மெட்ரிக் டன் வைக்கோல் வருகிறது என்ற அளவீட்டைக் கணக்கிட்டு, அந்த மூலப்பொருட்களைக் கொண்டு மரக்கூழ் தயாரிப்பதற்குண்டான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்சமயம், தமிழக அரசு 2017–2018 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட அறிக்கையில் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு இரண்டாம் அலகின்மூலம் உற்பத்தித் திறனை அதிகரிக்க ரூ.2,100 கோடி முதலீட்டினை அறிவித்துள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்சமயம் இந்த ஆண்டுத் திட்டத்திலே மொண்டிப்பட்டியில் மரக்கூழ் தயாரிக்கின்ற factory நிறுவுவதாக இருக்கிறது. வருங்காலத்திலே, வைக்கோலை மூலப்பொருளாகக் கொண்டு மரக்கூழ் உற்பத்தி செய்து, காகிதம் தயாரிப்பதற்குண்டான நடவடிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும். வைக்கோலின் அளவுகோலை R & D system–மூலம் research செய்து, எவ்வளவு திறன் இருக்கிறதென்று பார்த்து, செய்தித்தாள், பேப்பர் தயாரிப்பதற்குண்டான கரும்புச் சக்கை போன்று இருக்கின்றதா, மரக்கூழ் போன்று இருக்கின்றதா, வைக்கோலினுடைய திறன் எவ்வளவு இருக்கிறதென்ற அளவுகோலைக் கணக்கிட்டு, நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரங்களையெல்லாம் வெட்டி, இயற்கை வளங்களை அழித்துத்தான் காகிதங்களை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. இயற்கை வளங்கள் அழிவதினாலே நமக்கு மழை பெறுவதிலே சிரமம் இருக்கிறது. இதைத் தவிர்த்து, விஞ்ஞான ரீதியாக மாற்றுச் சாதனங்களை உபயோகப்படுத்த நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்கு அதிகமான புத்தகங்களை இங்கே தருவதனால், அவற்றைத் தூக்கிச் செல்வதற்கே சிரமமாக இருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட சூழ்நிலையில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்குத்தான் இந்த முறையை* modernize *செய்வதற்கு, விதிகளை ஏற்பாடு செய்து, முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். விரைவில் அது நடைமுறைக்கு வரும். உறுப்பினர்கள், அதுவும் உங்களைப் போன்றவர்கள், புத்தகங்களைத் தூக்கிச் செல்வதற்கு நாங்கள் கஷ்டத்தைக் கொடுக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எம். இராமச்சந்திரன்: *ஆகவே, அந்த மாற்றுச் சாதனங்களை ஏற்படுத்திட வேண்டும். மரங்களை, இயற்கை வளங்களை அழித்து அதன் மூலமாகக் காகிதங்களை உற்பத்தி செய்வதைத் தவிர்க்கும் வகையில், மாற்றுச் சாதனங்களை உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இயற்கை வளங்களை அழிப்பதாக உண்மைக்கு மாறான தகவலைக் குறிப்பிடுகிறார். இயற்கை வளங்களை எங்கேயும் அழிக்கவில்லை. யூகலிப்டஸ், சவுக்கு போன்ற மரங்களைத்தான் வெட்டுகிறோம். அதுமட்டுமல்ல; காகிதபுரத்தில் இருக்கிற* T.N.P.L.*–ல் நாங்கள்* plantation *செய்திருக்கிறோம். அதிலும்,* research *என்ற முறையில், திசு வளர்ப்பு எல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில் இருக்கிற அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களைத் தேர்வு செய்து, அந்த*

இடங்களில் யூக்கலிப்டஸ் மரங்களை நடுவதற்குண்டான திட்டமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. எங்கேயும் இயற்கை வளங்களை அழிக்கவில்லை. கரும்புச் சக்கைதான் பிரதான மூலப்பொருள். அதற்கு அடுத்தபடியாக யூக்கலிப்டஸ் மரமும், சவுக்கு மரமும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. கரும்புச் சக்கை, யூக்கலிப்டஸ் மற்றும் Subabul *போன்ற மரங்களை வாங்கி, மரக்கூழ் தயாரிக்கப்படுகிறது. மரக்கூழை சில சமயங்களில் நாங்கள்* import *செய்திருக்கிறோம். பேப்பர் மில்லுக்குப் போதவில்லை என்றால்,* import *செய்துதான் சில சமயங்களில் நடக்கிறது. எங்கேயும் இயற்கை வளங்களை அழிக்காத அரசு இந்த அரசு. அந்த முறையிலேதான் காகிதபுரத்தில் இருக்கிற இரண்டு மில்களின்மூலம்ஆண்டு ஒன்றுக்கு 6 இலட்சம் மெட்ரிக் டன் உற்பத்தி ஆகிறது. இப்போதுகூட நமது மொண்டிப்பட்டியில் இருக்கிற நிறுவனத்தில், மேல் பூசப்பட்ட அடுக்கு காகித அட்டை தயார் செய்கிறோம். சென்ற வருடம் 90 ஆயிரம் டன்தான் நாங்கள் உற்பத்தி செய்தோம். இப்போது 1 இலட்சத்து 80 ஆயிரம் டன் உற்பத்தித் திறன் கொண்ட அளவுக்கு அதை உருவாக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டு, காகிதபுரத்தில் இருக்கிற தொழிற்சாலை, மொண்டிப்பட்டியில் இருக்கிற தொழிற்சாலைகள் சிறப்பான முறையில் இலாபத்தை ஈட்டுகின்ற தொழில் நிறுவனங்களாக வளர்ந்துள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

204—

விசைத்தறிப் பூங்கா

***5034—திரு. சி. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கரி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், மகுடஞ்சாவடியில் விசைத்தறிப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?